**கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை - 2022**

---------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை

கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இல. 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம், ஒவ்வொரு ஆண்டறிக்கைக் காலப்பகுதியின் முடிவிலும் ஒரு சொத்தின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயன்பாட்டு ஆயட் காலம் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் முற்றாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட கிரயம் ரூபா 116,208,946 ஆன ஆதன இயந்திர உபகரணங்கள் பயனுள்ள ஆயட் காலத்தை மீள மதிப்பீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்வில் சுட்டிக் காட்டியவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டறிக்கைக் காலப்பகுதியின் முடிவிலும் ஒரு சொத்தின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயன்பாட்டு ஆயட் காலம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இல. 11 இன் பிரகாரம், மாற்று முறையாக நேரடியாக வருமானக் கூற்றில் இனங்காணப்பட்ட மூலதன மானியங்கள் நிதி நிலைமைக் கூற்றில் உரிமைகளின் கீழ் காண்பிக்கப்படுவது அதிகாரசபையின் கணக்கீட்டுக் கொள்கையானமையால் மீளாய்வாண்டின் மூலதன மானியக் காலக்கழிவு ரூபா 24,630,679 தொகை வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. அவ்வாறிருக்கையில் மூலதன மானியங்களில் இருந்து ரூபா 9,521,050 தொகையான வருமானமாக மாற்றப்பட்டிருந்ததன் காரணமாக அப் பெறுமதியால் மீளாய்வாண்டின் வருமானம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் உரிய கணக்கீட்டுக் கொள்கைகள் மாற்றப்படுவதன் மூலம் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு இத் தவறு சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங் களுக்கு இணங்கும் வகையில் கணக்கீட்டுக் கொள்கைகள் தயாரிக்கப்பட்டு மூலதன மானியம் சரியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வேலை பூர்த்தியாகி 2018 மார்ச் 30 ஆம் திகதி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 66,661,052 கிரயமான காலி பிரதேச அலுவலகக் கட்டிடத்திற்காக 2018 ஆம் ஆண்டிற்கு உரித்தான பெறுமானத்தேய்வு மதிப்பான ரூபா 2,504,360 தொகையான போதிலும் இது ரூபா 967,961 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கட்டிடங்களின் தேறிய பெறுமதி ரூபா 1,536,399 தொகை கூடுதலாகக் காண்பிக்கப் பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்குகளில் இவ் வேறுபாடு சீராக்கப்படும். | கட்டிடத்திற்கான சரியான பெறுமானத்தேய்வுப் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 15,999,140 பெறுமதியான ஊழியர் கடன் நிதியத்தின் மீதி நிதி நிலைமைக் கூற்றில் உரிமைகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் இது நடைமுறையல்லாப் பொறுப்புகளாகக் காண்பிக்கப்பட்டிருந்தன. | கணக்காய்வு அவதானிப்புகளின் படி, கணக்கு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் கடன் நிதியத்தின் மீதி நிதி நிலைமைக் கூற்றின் கீழ் சரியாகக் காண பிக்கப்பட வேண்டும். |
| (இ) | MV-X-Press Perl கப்பல் அனர்த்தத்திற்கு உரித்தான கடமைகளை மேற்கொள்வதற்காக அதிகாரசபை உத்தியோகத்தர் களுக்கு மேலதிகக் கொடுப்பனவை மேற்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படாது 2022 ஆம் ஆண்டிற்காக கோரப்பட்ட ரூபா 35,995,971 தொகையான ஊழியர் செலவினம் மற்றும் செலுத்தப்பட வேண்டியவைகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணாக அப் பெறுமதியால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டியவை கூடுதலாகவும், மிகை குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இல. 08 இன் பிரகாரம், 2021 ஆம் ஆண்டு முதல் இக் கொடுப்பனவிற்காக ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு ள்ளன. ஏதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் பணக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாவி டின் அதனை மீள இலாபத்திற்கு சேர்ப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளது. | முறையான அதிகாரத்திற்குள் மாத்திரம் கொடுப்பனவை மேற்கொள்வதற்குத் தேவையான ஒதுக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அதிகாரசபையின் இணையதளம் அபிவிருத்தி செய்யப்படுவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது வரையப்பட்டு 2022 ஆம் ஆண்டின் போது இரத்துச் செய்யப்பட்ட ரூபா 225,000 பெறுமதியான காசோலை பொறுப்பாக கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக ''மூலதன நடைமுறை வேலை'' எனும் பெயரில் செலவு வைக்கப்பட்டு உரிமைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் பயன்பாட்டு நிலையில் இல்லாத இவ் இணையதளத்திற்காக மேற்குறித்த ரூபா 225,000 தொகை உட்பட செலுத்தப்பட்டிருந்த ரூபா 405,250 தொகையான பணம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைக்குப் பதிலாக அருவகச் சொத்தாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | ஆத் தவறை 2023 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் பயன்படுநிலையில் இருக்கும் வரை நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | குப்பை கொட்டுவதற்கான அனுமதிகளை வழங்குவதற்காக ருஹுணு பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்படும் Dumping Permit Management System இற்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,400,000 தொகை கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராத காரணத்தால் அத் தொகையால் நிதிக்கூற்றுக்களில் அருவகச் சொத்துக்களும் செலுத்த வேண்டிய செலவினங்களும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. | இம் முறைமையின் ஆய்வுக் காலம் 2023 ஆம் ஆண்டின் போது பூர்த்தியானதை அடுத்து அருவகச் சொத்தாக கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்பாட்டில் உள்ள அருவகச் சொத்துக்கள் மற்றும் செலுத்தப்பட வேண்டிய செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | திறைசேரியில் இருந்து கிடைக்கப் பெறும் மூலதன மானியத்தில் இருந்து பயன்படுத்தப்படாது நிதி திறைசேரிக்கு தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது ''மூலதன நடைமுறை வேலை'' மற்றும் ''பயன்படுத்தப்படாத மானியம்'' எனும் பெயரில் இரு கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவ் இரு கணக்குகளுக்கும் மாற்றப் பட்டிருந்த முறையே ரூபா 4,044,400 தொகையும் ரூபா 968,945 தொகையுமாக ஆண்டின் இறுதியில் | நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள பணம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் பூர்த்தியடைந்ததை அடுத்து எஞ்சியுள்ள பணம் இதன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. குறித்த செயற்பாடுகள் பூர்த்தியானதை அடுத்து எஞ்சும் | திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெறும் மூலதன மானியத்தில் இருந்து பயன்படுத்தப்படாத நிதி திறைசேரிக்கு தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அக் கணக்குகள் இரண்டினதும் மீதி முறையே ரூபா 8,259,144 ஆகவும் ரூபா 2,440,518 ஆகவுமாகக் காணப்பட்டது. | பணம் இருப்பின் திறைசேரிக்கு மீள அனுப்பிவைக்கப்படுவதற்காக 2023 ஆம் ஆண்டின் இறுதியில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்து மூலச் சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | MV X Press Perl கப்பல் அனர்த்தத்தின் மூலம் மாசடைந்த கரையோர சுத்திகரிப்பில் கலந்து கொண்ட பல்வேறு குழுக்கள் மற்றும் அதிகாரசபையின் பதவியணிக்காக உணவு கொள்வனவு செய்யப்படுவதற்காக மீளாய்வாண்டின் போது 34 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தனியாள் எண்ணிக்கை தவிர்ந்த தனிநபர்கள் குறித்த தகவல்கள் குறிப்பிடப்பட்டிராமையால் உள்ளபடியான பங்கேற்பில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமைக்கு உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 8,153,485 | குறித்த நாட்களில் கரையோரச் சுத்திகரிப்பிற்காக கலந்துகொண்ட நிறுவனங்கள் மற்றும் பதவியணி உட்பட்ட வருகைப் பத்திரம் மற்றும் முன் திட்டம் ஆகியன நிட்சயமாகவும் அங்கீகரிக்கப்பட்ட தரவுகள் | பதவியணியின் பெயர்ப் பதிவேடு நாளதுவரையாக சமர்ப்பிக்கப்பட்டிராத போதிலும் வருகை மற்றும் உணவு பெறப்படும் தொகுப்புப் பதிவேடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. செயற்பாட்டு நடவடிக்கைக்கு கலந்து கொண்ட தரப்பினர்கள் தொடர்பான பெயர்ப் பட்டியல் வெவ்வேறாக களத்தில் பேணப்பட்டு வருகின்றது. | கரையோரச் சுத்திகரிப்பு நடவடிக்கை தொடர்பாக நாளாந்தம் கலந்து கொண்டவர்களின் பெயர்ப் பதிவேடு மற்றும் அவர்களுக்காக ஏற்கப்படும் செலவினம் தெளிவாக கொடுப்பனவு உறுதிச்சீட்டில் இணைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பணிப்பாளர் சபை செயற்பாடுகள் | - | 2022 ஆம் ஆண்டிற்கு உரித்தான பணிப்பாளர் சபை அறிக்கை | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | ஆரசியலமைப்பின் 154(5) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 7(I) ஆம் பிரிவின் பிரகாரம் பதவியணியினர் அறிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** 2008 இன் 35 ஆம் இலக்க கடல் மாசடைதலை தடுப்பதற்கான அதிகாரச்சட்டம் | | | |
| (i) 10(1) மற்றும் (2) ஆம் உப பிரிவு | உப பிரிவு 10(1) இன் படி, ஒரு உத்தரவைச் செயற்படுத்துவதற்கு உப பிரிவு 2(1) இன் கீழ் உத்தரவுகளைச் செய்யத்தவறியமையால் கடல் மாசடைவைத் தடுப்பதற்கு, குறைப்பதற்கு, கட்டுப்படுத்துவதற்கு அல்லது நிறுத்துவதற்கு தவறியதற்காக அபராதங்களை வசூலிப்பதற்கான வாய்ப்புகள் இழக்கப்பட்டிருந்தன. | அதிகாரச்சட்டத்தின் படி, செயற்படுவதற்கு கட்டளை தயாரிக்கப்படுவதற்கு தேவையில்லாததுடன் அபராதங்களை வசூலிப்பதற்கான ஏற்பாடுகள் இது வரையிலும் உள்ளன. எவ்வாறெனினும், அதிகாரச்சட்ட திருத்தத்தின் போது தண்டப்பணத்தை அறவிடும் முறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுவதற்கு உள்ளது. | அதிகாரச்சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் படி, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 6(எ) உப பிரிவு | திடீர் இரசாயனப் பொருள் கசிவின் போது தேசிய அளவில் செயற்பட வேண்டிய நிலை குறித்து ஓர் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | அதிகாரச்சட்டத் திருத்தத்தின் போது இரசாயனப் பொருள் கசிவின் போது தேசிய நிலையில் ஓர் திட்டத்தைத் தயாரிப்பதற்கு உரிய ஏற்பாடுகளை உள்ளடக்க உள்ளது. | ஆதிகாரச்சட்டத்திற்கு தேவையான திருத்தங்களை மேற்கொண்டு இரசாயனப் பொருட்கள் மற்றும் எண்ணெய் கசிவு திட்டத்தைத் தயாரித்து இதன் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எவ்வாறெனினும், இரசாயனப் பொருள் கசிவின் அபாயத்தை புரிந்துகொண்டு இரசாயனப் பொருள் கசிவின் திட்டத்திற்கு இரசாயனப் பொருள் கசிவை உள்ளடக்குவதற்கும் நிலவும் திடீர் இரசாயனப் பொருள் கசிவின் போது செயற்படுத்தப்படும் தேசிய திட்டம் இரசாயனப் பொருள் கசிவின் போது பயன்படுத்தப்படுவதற்கு இயலுமானவகையில் திருத்தப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (iii) | 14(3) உப பிரிவு | அதிகாரசபைக்கு அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கு உரித்தான விடயங்கள் தொடர்பாக அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்காக கடல் சுற்றாடல் சபையொன்று ஸ்தாபிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 யூன் மாதம் 17 ஆம் திகதிய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரின் தலைமையின் கீழ் சுற்றாடல் சபையை நடாத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அன்றைய தினம் சுற்றாடல் சபையை ஸ்தாபிப்பதற்கு இருக்க வேண்டிய அங்கத்தவர்கள் வருகைதந்திராததன் காரணமாக மீள ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி அமைச்சில் இதனை நடாத்துவதற்கு நடவடிக்கை ஆயத்தம் செய்யப்பட்டிருந்தது. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், கடல்சார் சுற்றாடல் சபையை ஸ்தாபித்து அதிகாரசபைக்கு அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கு உரித்தான விடயங்கள் தொடர்பாக அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | 16(3) உப பிரிவு | அதிகாரசபையின் செயலாளர் பதவிக்காக சட்டத் துறையில் அல்லது கம்பனிச் செயலாளர் நடவடிக்கைகள் தொடர்பாக போதிய அனுபவமும் தகமையும் கொண்ட ஓர் உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், 2022 செப்தெம்பர் மாதம் முதல் அவ்வாறில்லாத அமைச்சின் உத்தியோகத்தர்கள் செயலாளர் பதவிக்காக நியமிக்கப்பட்டிருந்தனர். ஆவ் உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள் தொடர்பாக விபரமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமையாளர், சட்டம் உத்தியோகத்தரின் சேவைக்காலம் 2023 யூன் மாதம் 30 ஆம் திகதி முடிவுறுத்தப்பட முன்னர் பணிப்பாளர் சபையின் நடவடிக்கைகளைத் தன்னால் மேற்கொள்ள இயலாதென 2022.10.19 ஆம் திகதி நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இருந்து நீங்கிச் சென்றதன் காரணமாக பணிப்பாளர் சபையின் செயலாளர் பதவியின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டத்துறையில் ஏற்ற உத்தியோகத்தர் அதிகாரசபைக்குள் இன்மையால் இதற்காக உள்ளகத் தகமை பெற்ற உத்தியோத்தரை ஆட்சேர்ப்பதற்கு பணிப்பாளர் சபையால் அறுவுற்றதல்கள் வழங்கப்பட்டுள்ளன. . | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சட்டத்துறையில் அல்லது கம்பனி நடவடிக்கைகள் தொடர்பாக போதிய அனுபவமும் தகமையும் கொண்ட ஓர் உத்தியோகத்தரை நியமித்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 136 | அங்கீகாரம் இன்றி அதிகாரசபையின் விருப்பிற்கமைய 2021 ஆம் ஆண்டிற்கான ரூபா 3,283,838 தொகையும் 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,950,642 தொகையுமாக உத்தியோகத்தர்களின் வைத்தியசாலைக் கட்டணப் பட்டியல்கள் | சகல வைத்தியசாலைக் கட்டணக் கொடுப்பனவுகளும் பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கமைய மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஏற்கப்பட்ட செலவினங்கள் மீளளிக்கப்படுவதற்கா | பிரமாணங்களின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நலன்கள் மாத்திரமே பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டதை அடுத்து ஊழியர்களுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்தது. | க இது வரையிலும் காப்புறுதிக் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 137 (2) | அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தில் பாதுகாப்பு வழங்குவதற்கு உடன்படிக்கையின் படி, இரவும் பகலும் இரு பாதுகாப்பு அதிகாரிகள் பணிக்கமர்த்தப்பட வேண்டும். எனினும், ஒரு பாதுகாப்பு அதிகாரி மாத்திரமே பல நாட்களாகத் தொடர்ந்து 24 மணி நேரம் பணியில் இரு அதிகாரிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டு 2022 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 716,045 செலுத்தப்பட்டிருந்தது. மேலும், பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யப்பட்டிராத இந் நிறுவனத்தின வாடிக்கையாளர்களைப் பற்றிய தகவல்களைப் பெறாது ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | பாதுகாப்புக் கம்பனியின் உள்ளகப் பிரச்சனை காரணமாக சில சந்தர்ப்பங்களின் போது ஒரு உத்தியோகத்தர் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். மீள பாதுகாப்பு சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக கேள்வி கோரப்பட்டு இப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம், பாதுகாப்பு சேவை பெறப்படுவது குறித்து முறையான கண்காணிப்பு கிடைக்கப்பெறுவது குறித்து முறையான கண்காணிப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதுடன் உடன்படிக்கை மீறுப்பட்ட சந்தர்ப்பங்களின் போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளல் மற்றும் ஏற்ற பாதுகாப்பு சேவை நிறுவனம் ஒன்றைத் தேர்ந்தெடுத்திராமை தொடர்பாக உத்தியோகத்தர்கள் பொறுப்பிற்கு உட்பட்டிருக்க வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 139 (8) மற்றும் (9) மற்றும் 446 (2) | அதிகாரசபையால் பேணப்பட்ட எழுத்து மூலக் காசேட்டிற்கும் Quick Book முறைமையில் உள்ளடக்கப்பட்ட காசேட்டிற்கும் சில கொடுக்கல்வாங்கல்கள் சரியாக உள்ளடக்கப்பட்டிராமை மற்றும் வேறுபாடுகள் உள்ளமை நாளாந்தம் சமப்படுத்தப்பட்டு | காசேட்டை பதிவு செய்கையில் ஏற்பட்ட தவறுகள் ஏற்பட்டுள்ளமையால் இவ்வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இத்தகைய பதிவுத் தவறுகள் ஏற்படாதவகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காசேட்டை பதிவு செய்கையில் மேலும் கவனமாக செயற்பட வேண்டும் என்பதுடன் நாளாந்தம் சமப்படுத்தப்படுத்துவதற்கும் கண்காணிக்கப்ப |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காசேட்டில் மீதி பரீட்சிக்கப்பட்டிராமையும், எழுத்து மூல காசேடு சமப்படுத்தப்படுகையில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையும், மேற்பார்வை உத்தியோகத்தரால் மேற்பார்வை செய்யப்பட்டிராமையும் காரணமாகியிருந்தமையால் முறையான திட்டத்துடன் சரியான காசேட்டைப் பேணாமை அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வாளருக்கு நாளாந்தம் காசேட்டை கைச்சாத்திடுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . |
| (iv) | நி.பி 206(5) | மீளாய்வாண்டின் போது உணவு பெறப்படுவது தொடர்பாக மொத்தப் பெறுமதி ரூபா 4,450,810 தொகையான 18 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரால் இதற்காக கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உறுதிச்சீட்டுக்களின் பெறுமதி மாற்றம் செய்யப்படுகையில் சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் குறுங்கையொப்பம் உரிய சகல இடத்திலும் இடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உறுதிச் சீட்டுக்களில் மேற்கொள்ளப்படும் சகல மாற்றங்களும் சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரால் கையொப்பம் இடப்பட்டு சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (v) | நி.பி. 261(3) | நாளாந்தம் காசேட்டு மீதி சமப்படுத்தப்பட்டு காசேடு ஆய்வு செய்யப்பட்டு காசோலைகள் விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி முதல் 2023 பெப்ரவரி 14 ஆம் திகதி வரையான காலத்தின் போது நாளாந்தம் காசேடு சமப்படுத்தப்பட்டு மீதி ஆய்வு செய்யப்படாது 45 நாட்கள் தொடர்ந்து காசோலைகள் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தேரிவிக்கப்பட்டுள்ள கருத்து சரியானதல்ல. | நாளாந்தம் காசேடு சமப்படுத்தப்பட்டு கொடுப்பனவிற்காக போதிய காசு மீதி உள்ளதென உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (vi) | நி.பி. 139(7) மற்றும் 262(3) | மீளாய்வாண்டின் போது உணவுப் பொருட் கொள்வனவிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 8,153,485 தொகை கொடுப்பனவிற்கான 34 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களிலும் தங்குமிட வசதிகளுக்காகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 15,859,400 இற்கான 31 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களிலும் ‘‘கொடுப்பனவு செய்யப்பட்டது’’ எனும் முத்திரை மீது கொடுப்பனவு உத்தியோகத்தரால் குறும் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்வுப் பரிந்துரைக்கமைய ‘‘கொடுப்பனவு செய்யப்பட்டது’’ எனும் முத்திரை மீது குறும் கையொப்பம் இடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கொடுப்பனவு உத்தியோகத்தரால் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் ‘‘கொடுப்பனவு செய்யப்பட்டது’’ எனும் முத்திரை மீது குறும் கையொப்பம் இடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vii) | நி.பி. 756(6) மற்றும் 2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு அறிக்கை கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | இக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட நிர்வாக உத்தியோகத்தர் மரணித்ததன் காரணமாக இச் செயற்பாட்டைப் பூர்த்திசெய்ய இயலாது போயிற்று. தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படும். | பிரமாணத்தின் பிரகாரம், யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இல. பீஈடீ.⁚.01.⁚.2021 ஆம் இலக்க பொது முயற்சிகளிற்கான நல்லாட்சி வழிகாட்டல் மற்றும் இதற்கு உரித்தான வழிகாட்டி | | | |
| (i) | வழிகாட்டலின் 2.3 ஆம் அத்தியாயம் | 05 வருட காலம் உள்ளடங்கும் வகையில் உபாயமார்க்க திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டிய போதிலும் 2022 முதல் 2025 வரையான 04 ஆண்டுகாலம் உள்ளடங்கும் வகையில் | 2022 – 2025 உபாய மார்க்கத் திட்டத்தில் முக்கிய செயற்திறன் காரணிகளைக் காண்பித்திராததுடன் வருடாந்தம் பெறப்படும் ஏற்பாடுகளை | வழிகாட்டலின் படி, முக்கிய செயற்திறன் காரணிகளடங்கிய 5 ஆண்டுகள் உள்ளடங்கும் வகையில் உபாயமார்க்கத் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தயாரிக்கப்பட்டிருந்த அத் திட்டத்திற்கு முக்கிய செயற்திறன் காரணிகளை உள்ளடக்கி வருடாந்தம் நாளதுவரையாக்கி திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடிப்படையாகக் கொண்டு அத் திட்டங்களின் நோக்கங்களுக்கு உரித்தான செயற்பாடுகளுக்காக வருடாந்த செயற்றபாட்டுத் திட்டத்தில் பௌதீக இலக்கும் முக்கிய செயற்திறன் காரணளும் காண்பிக்கப்பட்டுள்ளன . | திட்டம் தயாரிக்கப்பட்டு வருடாந்தம் நாளதுவரையாக் கப்பட்டு திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படுவ தற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 3.6 ஆம் அத்தியாயம் | பணிப்பாளர் சபையால் உபாயமார்க்கத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஆக்கபூர்வமான செயற்திறன் மதிப்பீட்டு முறை ஒன்று அதிகாரசபைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் படி எதிர்வரும் 5 ஆண்டுகளுக்காக உபாயமார்க்கத் திட்டத்தை நாளதுவரையாக்கல் 2023 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படுவதற் கும் 2024.01.15 ஆம் திகதிக்கு முன்னர் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு ம் நடவடிக்கை எடுக்கப்படும். | வழிகாட்டலின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 6.6 ஆம் பந்தி | நிதியாண்டு பூர்த்தியடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வரைவு ஆண்டறிக்கை ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான வரைவு ஆண்டறிக்கை 2023 யூலை 31 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான வரைவு ஆண்டறிக்கை 2023.07.31 வரையிலும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | வழிகாட்டலின் படி, நிதியாண்டு பூர்த்தியடைந்து 60 நாட்களுக்குள் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | செயற்பாட்டுக் கைநூல் 2.3 ஆம் அத்தியாயம் | அதிகாரசபையால் தமக்கென்றொரு நிர்வாக மற்றும் நிதிக் கைநூல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | அதிகாரசபையால் தமக்கென்றொரு நிர்வாக மற்றும் நிதிக் கைநூல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நிர்வாக மற்றும் ஒழுக்காற்று | வுழிகாட்டலின் படி, செயற்பாட்டுக் கைநூல் ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் படி நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைகளின் போது தாபன விதிக் கோவையைத் தொடர்புபடுத்திக் கொள்வதற்காக 2022.10.19 ஆம் திகதி நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் படி, அதிகாரசபையின் நிர்வாக மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளின் போது தாபன விதிக் கோவை மற்றும் நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எடுக்கப்பட வேண்டும். |
| (v) | 3.3 (i) மற்றும் (iii) ஆம் அத்தியாயம் | உபாயமார்க்கத் திட்டத்திற்கு ஒவ்வொரு பிரிவிலும் உள்ள ஊழியர்களின் தேவைப்பாட்டை முறையாக உள்ளடக்கும் வகையிலான ஒன்றிணைந்த மனிதவள திட்டம் ஒன்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு பிரிவினதும் ஊழியர் தேவைப்பாட்டை உள்ளடக்கிய ஒன்றிணைந்த மனிதவள திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டிராததுடன் எதிர் காலத்தில் முகாமைத்துவ சேவை திணைக்களத்துடன் கலந்துரையாடி அங்கீகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | வுழிகாட்டலின் படி, செயற்பாட்டுக் கைநூலின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vi) | 3.4 (viii) ஆம் அத்தியாயம் | முகாமையாளர் (சட்டம்) உத்தியேகத்தரின் சேவையை 2023 யூன் 30 ஆம் திகதி முதல் முடிவுறுத்துவதற்காக பணிப்பாளர் சபையால் 2022 நவம்பர் 17 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அப் பதவியின் கடமைகளையும் பொறுப்புகளையும் தடங்கலின்றி மேற்கொள்வதற்காக | அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு உரித்தான அங்கீகாரம் இது வரையிலும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | பதவியின் கடமைகளையும் பொறுப்புகளையும் தடங்கலின்றி மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (vii) | 3.4 (ix) ஆம் அத்தியாயம் | விசேட நிலைமையின் கீழ் பதில் கடமையாற்றும் நியமனம் ஒன்று மேற்கொள்ளப்படுவதாயின் அது ஒரு வருடத்திற்கும் உட்பட்ட கால எல்லைக்குட்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் பொது முகாமையாளர் உள்ளடங்கலாக 04 சிரேஷ்ட நிலைப் பதவிகளிலும் 04 மூன்றாம் நிலை பதவியிலும் 01 வருடம் 11 மாதங்கள் முதல் 06 வருடங்கள் 06 மாதங்கள் வரையான காலமாக பதில் கடமை நிலையிலும் கடமை மேவுகை அடிப்படையிலும் கடமையாற்றியிருந்தனர். | வெற்றிடமாகியுள்ள பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு கோரப்பட்டிருந்த போதிலும் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருக்க வில்லை. புணி நீக்கத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தருக்கு எதிராக தொழில் நீதிமன்றத்தில் நடாத்தப்பட்ட வழக்கு பூர்த்தியடைந்திராமையும் 2019 ஆம் ஆண்டு முதல் சகல ஆட்சேர்ப்புகளும் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தமையாலும் ஆட்சேர்க்க முடியாதுள்ளது. அதிகாரசபை நடவடிக்கைகள் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பேணப்படுவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் படி, பதில் கடமை நிலையிலும் கடமை மேவுகை அடிப்படையிலும் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. | வழிகாட்டலிற்கு உரித்தாக செயற்பாட்டுக் கைநூலின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 ஆம் ஆண்டின் போது அனர்த்தத்திற்குள்ளான கப்பலின் மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா 10 மில்லியன் தொகையான நட்டஈடு | 2011 ஆம் ஆண்டு முதல் திடீர் எண்ணெய் கசிவு ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தின் போது திறைசேரியில் இருந்து | இந் நிதியத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய குறித்த செயற்பாடுகள் |

| | | | |
|---|---|---|---|
| | கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு நிதியத்தின் பெயரில் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் முதலீட்டு வட்டி சேகரிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அம் மீதி ரூபா 19,486,831 ஆகக் காணப்பட்டது. குறிப்பான செயற்பாடு இனங்காணப்படாது உருவாக்கப்பட்ட இந் நிதியம் 12 ஆண்டு காலமாக விளைவற்றுக்காணப்பட்டது. | ஒதுக்கீடு கிடைக்கப்பெறும் வரை தேவையான சந்தர்ப்பங்களின் போது செயற்பாட்டு நடவடிக்கைகளிற்காக இந் நிதிய நடவடிக்கைகளிற்காக இந் நிதியத்திலிருந்து பணம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறே, நிதியத்தின் முதலீட்டின் இருந்து இது வரையில் ரூபா 9.4 மில்லியன் தொகையான வட்டி ஈட்டப்பட்டுள்ளது. | இனங்காணப்பட்டு இவற்றை ஆக்கபூர்வமாக செலவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் மாதாந்த சராசரி செலவினம் ரூபா 125,539,830 ஆகக் காணப்பட்ட போதிலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசேட்டு மீதி ரூபா 277,646,779 ஆகக் காணப்பட்டமையால் தேவைப்பாட்டைப் பார்க்கிலும் மேலாக நடைமுறைக் கணக்கில் பணம் பேணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆதிகாரசபையின் செயற்பாட்டு மிகை காரணமாக சாதகமான காசு மீதி நடைமுறைக் கணக்கில் உள்ளது. இது நாளாந்தம் முதலீடு செய்யப்படுவதுடன் அவ்வாறு முதலீடு செய்யப்பட்டமையால் 2023 இன் முதல் 06 மாதங்களின் போது மாத்திரம் ரூபா 15.5 மில்லியன் தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. எதிர் காலத்தில் அதிகாரசபையின் தேவைப்பாட்டின் படி, அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக இந் நிதியைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு நடைமுறைக்கணக்கில் காசைப் பேணி செயற்திறனான நிதி முகாமைத்துவத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 209,250,751 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 98,304,624 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 307,555,375 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு MV Xpress Pearl அனர்த்தத்திற்கு உரித்தாக ரூபா 442.5 மில்லியன் தொகையான செலவினம் மீளளிக்கப்பட்டமை முக்கிய காரணமாகியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| MV X Press Perl கப்பல் அனர்த்தத்திற்கு உரித்தாக சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருள் களஞ்சியப்படுத்துவதற்காக வத்தளையில் தற்காலிகமாக களஞ்சியசாலையில் இருந்து பமுணுகம களஞ்சிய பிரிவிற்குக் கொண்டுசெல்வதற்காக தாமதமானமையால் 40 கொள்கலன்களுக்காக தாமதக் கட்டணமாக ரூபா 17,934,000 தொகை மேலதிகமாகச் செலுத்த நேர்ந்தது. | இவை ஆபத்தான கழிவானமையால் ஆய்வு செய்யப்படாது கொண்டு செல்லப்படுவதற்கு முடியாது போனமையால் மாதிரிப் பரிசோதனையை அடுத்து கப்பலின் காப்புறுதி நிறுவன முகவர்களுடன் கலந்துரையாடி 2021 ஒக்டோபர் மாதம் வத்தளையில் இருந்து பமுனுகம களஞ்சியத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | காப்புறுதி நிறுவகனத்திடம் இருந்து சகல பணத்தொகையையும் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாது துறைமுகங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு கழிவுப் பொருள் சேவை மீள்சுழற்சி வசதிகளுக்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை நாளொன்றிற்கு ரூபா 750 படி செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,951,550 தொகையான கொடுப்பனவு தொடர்பாக ஆரம்ப விசாரணைகளை நடாத்துமாறு 2021 திசெம்பர் 28 ஆம் திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தினால் வழங்கப்பட்ட பரிந்துரை செயற்படுத்தி பொறுப்பு வாய்ந்த நபர்களிடம் இருந்து அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையின் விசாரணைக் குழுவிற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் செயலாளரிற்கு இதுவரையிலும் அறிவிக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், அங்கீகாரமற்ற கொடுப்பனவுகள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினர்கள் தொடர்பாக அவசியமான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் செயற்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 20,000 பொலிசெக் பைகளின் கொள்வனவிற்காக 2022 பெப்ரவரி 07 ஆம் திகதி கிடைக்கப்பெற்றிருந்த பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தின் படி, 10,000 பைகள் 2022 பெப்ரவரி 23 ஆம் திகதி பெறப்பட்டு இதற்கு உரித்தான ரூபா 375,000 தொகை வழங்குனருக்கு வழங்கப்பட்டு மீள 2022 மார்ச் 09 ஆம் திகதி வரையில் எஞ்சிய 10,000 பைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும் வழங்குனர் இருப்பு முடிவுற்றதாகக் குறிப்பிட்டு 2022 யூன் 28 ஆம் திகதி மீள விலைக் கோரல்கள் மேற்கொள்ளப்பட்டு 10,000 பைகள் ரூபா 1,000,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதன் படி, மொத்தம் 20,000 பைகள் தேவைப்பாட்டில் விலை மனுக்கள் கோரப்பட்டு 10,000 மாத்திரம் கட்டளையிடப்பட்டமையால் அதிகாரசபைக்கு ரூபா 625,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | இக் கணக்காய்வு அவதானிப்பு தொடர்பாக அதிகாரசபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்தின் படி இவ் விசாரணை அறிக்கை, உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் உதவி முகாமையாளர் (கட்டுப்பாடு) இன் பதில் 2023.07.27 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக பணிப்பாளர் சபைப் பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கு பணிப்பாளர் சபையால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. | விசாரணை அறிக்கையின் பரிந்துரையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு உத்தியோகத்தர்களுக்கு பின்னர் கொடுப்பனவு செய்யும் நோக்கில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி இல 3143 முதல் 3175 வரையான 32 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்கு உரித்தான இலக்கங்கள் காசேட்டில் பதிவுசெய்யப்பட்டிருந்தன. இவ்வாறே காசோலைகள் பின்னர் பெற்றுக்கொள்ளும் நோக்கில் 210910 முதல் 210950 வரைய 50 காசோலைகள் உள்ளடங்கிய காசோலைப் புத்தகம் ஒன்று ஒதுக்கப்பட்டு அவ் இலக்கங்கள் எதுவித கொடுப்பனவு விபரமும் இன்றி விநியோகப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு பின்னர் அக் காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. இச் சர்ச்சைக்குரிய செயற்பாடுகள் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக இது வரையிலும் ஆரம்ப விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக் குழுவின் பரிந்துரையின் படி, எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறை பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் விசாரணைக்குழுவின் பரிந்துரைப்படி பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | MV X Press Perl கப்பல் அனர்த்தத்திற்கு உரித்தாக அதிகாரசபையால் ஏற்கப்பட்ட செலவினமும் ஏனைய நிறுவகங்களால் ஏற்கப்பட்ட செலவினங்களின் ஓர் பகுதியும் உள்ளடங்கலாக 13 சந்தர்ப்பங்களின் போது மீளளிப்பிற்காக கப்பல் காப்புறுதி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த அ.டொ. 48,408,208 இல் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த தொகையான அ.டொ. 6,725,298 தொகையும் ரூபா 20,317,670 தொகையுமாகக் காணப்பட்டது. கோரப்பட்ட அ.டொ. 32,379,067 தொகையான மதிப்பிடப்பட்ட செலவினமானமை மற்றும் நிர்வாகச் செலவினம் 25 சதவீதம் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் காப்புறுதி நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் மீளளிப்புகள் | MV X Press Perl கப்பலிற்கு உரித்தான காப்புறுதி நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மொத்த இடைக்கால உரித்துக் கோரிக்கைகளில் அதாவது அ.டொ. 48.4 மில்லியன் தொகையில் உள்ளபடியான செலவின மீளளிப்பு மாத்திரமேயான காப்புறுதிக் கொள்கைகளுக்கமைவாக அ.டொ. 32,3 மில்லியன் மதிப்பிடப்பட்ட செலவினமானமையாலும் நிர்வாகச் செலவினமாக 25 சதவீதம் உள்ளடக்கப்பட்டிருந்தமையாலும் அத் தொகையைச் செலுத்துவதற்கு காப்புறுதி நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தது.<br><br>சமர்ப்பிக்கப்பட்ட உரித்துக் கோரிக்கைக்காக மேலும் | நிராகரிப்புகளைக் கருத்திற் கொண்டு எதிர்காலத்தில் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகையில் உாயி கவனத்துடன் செயற்படுவதற்கும் சகல மீளளிப்புகளையும் பெற்றுக்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட மாட்டாதெனவும் கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | அ.டொ. 6.7 மில்லியனை அண்மித்த தொகை கிடைக்கப்பெற உள்ளது. | |
| (இ) | 2021 மே 20 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்திலிருந்து 9.5 கடல் மைல் தொலைவில் ஏற்பட்ட MV X Press Pearl கப்பல் அனர்த்தம் தொடர்பாக அதிகாரசபையால் குற்றவியல் பொறுப்பின் கீழ் 2022 நவம்பர் 15 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் அவ் வழக்கின் தீர்ப்புகள் 2023 ஜுலை 10 ஆம் திகதி வரை வழங்கப்பட்டிருக்கவில்லை.<br>இதற்கு உரித்தான சிவில் பொறுப்பின் கீழ் 2023 மே மாதத்தின் போது சிங்கப்பூர் வர்த்தக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் அதன் முன்னேற்றம் குறித்து அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | கப்பல் அனர்த்தம் தொடர்பாக குற்றவியல் பொறுப்பின் கீழ் 2022 நவம்பர் 15 ஆம் திகதி கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த இல. 4118/2022 ஐக் கொண்ட வழக்கு இதுவரையிலும் விசாரணையில் உள்ளது. 2023.01.20 ஆம் திகதி வழக்கு முதற்தடவையாக விசாரணைக்குட்படுத்தப்பட்டதுடன் இதனை அடுத்து 2023.02.27, 2023.02.28, 2023.06.01 மற்றும் 2023.06.15 ஆம் திகதி வழக்கு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தது. நீதிமன்றச் செயற்பாடுகளுக்காக எடுக்கும் கால எல்லைப் படி, தீர்ப்பு வழங்கப்படும் தினம் தீர்மானிக்கப்படும். வழக்கிற்குத் தேவையான நடவடிக்கைகள் இவ் அதிகாரசபையால் மேற்கொள்ளப்படுவதுடன் தீர்ப்பு வழங்கப்படும் காலம் குறித்து எமது அதிகாரசபைக்கு தாக்கம் செலுத்தக்கூடிய இயலுமையில்லை.<br><br>சிவில் பொறுப்பின் கீழ் மேற்குறித்த கப்பல் அனர்த்தத்திற்கு உரித்தான 2023 மே மாதம் சிங்கப்பூரில் உள்ள நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன் அச் சகல நடவடிக்கைகளும் சட்ட மா அதிபதி திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு அவசியமான உதவியை வழங்குவது இவ் அதிகாரசபையால் மேற்கொள்ளப்படுகின்றது. | சாதகமான முறையில் வழக்கு நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்காக அதிகாரசபையின் பொறுப்பை முறையான வகையில் செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2018 யூன் 06 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் படி, இலங்கை துறைமுகங்கள் உள்ளடங்கலாக கரையோரப்பகுதியில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்துடன் தொடர்பான சகல நிறுவனங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கழிவுப் பொருள் முகாமைத்துவத்தின் 84 குழுக்கள் ஆகக் குறைந்தது ஒரு மாதத்திற்கு ஒரு தடவையேனும் கூட வேண்டிய போதிலும், 64 கூட்டங்கள் 2022 ஆம் ஆண்டின் போது கூட்டப்படாதி ருந்ததுடன் 12 குழுக்கள் ஒரு கூட்டத்தொடரையும் 04 குழுக்கள் இரு கூட்டத்தொடர்களையும் மாத்திரம் கூட்டியிருந்தனர். இவ்வாறே 63 குழுக்கள் ஆண்டின் போது கரையோர வலயப் பரிசோதனையை மேற்கொண்டிராமை அவதானிக்கப்பட்டது. இதன் படி, கரையோரப்பகுதியில் தரத்தை மேம்படுத்தி மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறைகளின் வருமானத்தை அதிகரித்தல் ஆகிய இக் குழுக்களில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் எய்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருள் இன்மையால் எதிர்பார்க்கப்பட்டவாறு செயற்பாட்டு அலகுகளுக்கு உரித்தான கூட்டங்களும் கள ஆய்வுகளும் நடாத்தப்படுவதற்கு முடியாதிருந்தன.<br><br>பொதுத் திறைசேரியிடமிருந்து பண வழங்கல் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததன் காரணத்தால் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தை எய்த இயலாதிருந்தது.<br><br>2023 ஆம் ஆண்டின் போது கழிவுப் பொருள் முகாமைத்துவக் குழுக்களின் தேசியக் குழுக் கூட்டம் கூட்டப்பட்டு ஒவ்வொரு நிறுவனத்தினதும் செயற்பாட்டுப் பணிகள் வெவ்வேறாக இனங்காணப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் இச் செயற்பாடு மிகவும் ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனான முறையிலும் மேற்கொள்வதற்காக கையடக்க தொலைபேசி முறைமை ஒன்று தயாரிக்கப்படும் நிலையில் உள்ளது. | அமைச்சரவை அங்கீகாரத்தின் படி, இலங்கை துறைமுகங்கள் உள்ளடங்கலாக கரையோர வலயத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பான சகல நிறுவனங்களும் பிரதிநிதித்துவம் செய்யப்படும் வகையில் ஸ்தாபிக்கப்பட்ட கழிவுப் பொருள் முகாமைத்துவத்தின் 84 பிரதேச குழுக்கள் ஆகக் குறைந்தது ஒரு மாதத்திற்கு ஒரு தடவையேனும் கூட்டப்பட வேண்டியதுடன் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தை எய்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | உணவுப் பொதிகளாகப் பெற்றுக்கொள்வதற்காக விலைக் கோரல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், உணவுப் பொருட்கள் வெவ்வேறாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக அச் செலவினங்கள் சிக்கனமானவை என உறுதிப்படுத்த முடியாதிருந்தது. மேலும், 61 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களால் உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டமை மற்றும் தங்குமிடக் கட்டணங்களுக்காக | உணவுப் பொருள் வகைகள் மற்றும் குறித்த உணவு வகைகளில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட அளவுகள் மற்றும் பெறுமதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.<br><br>பற்றுச்சீட்டுக்கள் எழுதப்படுகையில் அதிகாரசபையின் பெயர் குறிப்பிடப்பட்டிராமை அச் சந்தர்ப்பத்தில் கவனத்திற்கு உட்பட்டிராததுடன் எதிர்வரும் காலங்களில் இது தொடர்பாக | விலைக்கோரல்கள் பெறப்பட்ட விதத்தில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிதுடன் அதிகாரசபையின் பெயரில் விநியோகிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனர் வெளிப்படையான நிலையில் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்கள் பொறுப்பிற்கு உட்பட |

| | | |
|---|---|---|
| | ரூபா 23,154,710 கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உரித்தாக விநியோகிக்கப்பட்டிருந்த பட்டியல்களின் தொடர் இலக்கங்கள் மாற்றமடையாது தொடர்ச்சியாக உள்ளமை மற்றும் அதிகாரசபையின் பெயர் குறிப்பிடப்படாமையும், பற்றுச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்ட வழங்குனரின் பெயரிற்குப் பதில் வேறு பெயர்களில் காசோலைகள் வரையப்பட்டிருந்தமை போன்ற காரணங்களால் இக் கொடுப்பனவுகளின் சரியான தன்மை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. இச் சர்ச்சைக்குரிய தன்மையான விடயம் தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கவனம் செலுத்தப்படுவதாக தெரிவித்துக்கொள்கின்றேன்.<br><br>இவ்வாறே, அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் தொடர் இலக்கங்களில் இருந்தமை அதிகாரசபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிலையில் நேர்ந்துள்ள விடயமாகவும், வழங்குனர் மற்றும் காசோலைகளில் குறிப்பிடப்பட்ட பெயர்களுக்கிடையேயான வேறுபாடு நிலவியமை வழங்குனரால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பேரில் என்பதையும் அறியத்தருகின்றேன். | வேண்டும். |
| (ஊ) | MV X Press Perl கப்பல் அனர்த்தத்தினால் சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது இரு சந்தர்ப்பங்களில் பெறுகை வழிகாட்டலிற்கு மாறாக வழங்குனர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 1,400 உம் ரூபா 1,500 படி செலுத்தப்பட்டு வாடகைக்குப் பெறப்பட்டிருந்த forklift இயந்திரத்தின் உடன்படிக்கைக் காலம் 07 மாதங்கள் எஞ்சிய நிலையில் இருக்கையில் மீள 2022 மே மாதம் விலைகோரல்கள் கோரப்பட்டு அவ் வழங்குனரால் மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 2,900 படியான விலைக் கோரல்கள் அவ் இயந்திரம் உள்ள வத்தளை களஞ்சியத்தினூடாகப் பெறப்பட்டு ஏலம் முடிவுறுத்தப்பட்டு 03 நாட்களின் பின்னர் திறக்கப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயமாக அவதானிக்கப்பட்டது. இவ் இயந்திரத்திற்காக 2022 | நாட்டில் நிலவிய கோவிட் நிலை மற்றும் போக்குவரத்துத் தடை காரணமாக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்ததன் காரணமாக பெறுகை நடைமுறையை முற்றாகப் பின்பற்ற இயலாதிருந்தது. பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவலின் அடிப்படையில் விலைகள் பெறப்பட்டிருந்தன. டோலரின் பெறுமதி அதிகரித்தமை மற்றும் விலைகள் மிகவும் அதிகமான அளவில் அதிகரித்தமையின் அடிப்படையில் ஏலத்தின் பின்னர் நீர்கொழும்பு பிராந்திய அலுவலகத்திற்கு வழங்குனர் ஒருவரால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த விலைமனுக்கள் 2022.05.30 ஆம் திகதி திறக்கப்பட்டு சாதகமான நிலையில் ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 2,900 தொகைக்கு ஏலம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேலும், திறைசேரியால் நிலையான சொத்துக்கள் கையேற்கப்படுவது | தேவைப்பாட்டை இனங்கண்டு பெறுகைச் செயற்பாடு பின்பற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டிற்கு உரித்தாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,433,800 தொகையானதுடன் அதிகாரசபைக்கு நீண்ட காலமாக அவ் இயந்திரத்தின் தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு புதிய இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிராமையால் வருடாந்தம் பாரிய செலவை ஏற்க நேர்ந்துள்ளது. | நிறுத்தப்பட்டுள்ளமையால் புதிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | |
| (எ) | MV X Press Perl கப்பல் அனர்த்தத்தினால் சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்படாது சந்தை விலைக் கோரல்கள் பின்பற்றப்பட்டு தொழிநுட்ப மதிப்பீடு இன்றி 25,000 சதுர அடி அளவிலான தேவைக்குப் பதிலாக 48,765 சதுர அடி அளவிலான விஸ்தீரணமான களஞ்சியம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு 2021 யூன் மாதம் முதல் 06 மாதங்களுக்கு தலா ஒரு மாதத்திற்கு ரூபா 1,706,775 தொகையும் இரண்டாவது 06 மாத காலத்திற்கு இதனை விட 40 சதவீதம் அதிகமாக தலா ஒரு மாதத்திற்கு ரூபா 2,400,000 ஆக கட்டணம் உயர்த்தி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இக் களஞ்சியத்திற்காக அரசாங்கத்தின் மாதாந்த மதிப்பீடு ரூபா 1,800,000 ஆகியமையால் இரண்டாவது 06 மாத காலத்திற்கு ரூபா 3,600,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் 30,000 சதுர அடிக்காக மாதாந்தம் ரூபா 1,755,000 தொகையான விலை மனு நிராகரிக்கப் பட்டிருந்தமையால் ரூபா 3,580,650 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தமையும் அவதானிக் கப்பட்டது. மேலும், இச செயற்பாட்டிற்காக களஞ்சியம் ஒன்று ஒரு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெறப்படுவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் 2022 | இக் களஞ்சியத்தில் வெறுமனே களஞ்சியப்படுத்தல் மாத்திரமின்றி, களஞ்சியப்படுத்தப்படும் பொருட்கள் வகைப்படுத்தல், மீள சுற்றாடலுக்கு சேர்க்கப்படக் கூடிய பொருட்களை வேறுபடுத்தல், உபகரணங்கள் மற்றும் வாகனங்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் போன்ற தேவைப்பாடுகளும் காணப்பட்டமையால் 25,000 சதுர அடி அளவினை ஆகக் குறைந்த தேவைப்பாடாகக் கொண்டு இதற்கு மேற்பட்ட சதுர அடி அளவு குறித்து கவனம் செலுத்தப்பட்டு மதிப்பீட்டு நடைமுறை மேற்கொள்ளப்பட்டது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இணக்கப்பாடு, காப்புறுதி பிரமுகர் நிறுவனத்தின் இணக்கப்பாட்டுடன் இச் செயற்பாட்டிற்காக ஏற்ற களஞ்சியம் எனும் விடயத்திற்கமைவாக இக் களஞ்சிய வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படுவதற்கும் காலத்தை நீடித்துக் கொள்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | தேவைப்பாட்டிற்கமைவாக பெறுகைத் தேவைப்பாட்டைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 14 ஆம் திகதி நிறைவடைந்திருந்த போதிலும் இக் களஞ்சியத்தின் எதிர்காலத் தேவைப்பாடு, 2022 செப்தெம்பர் 06 ஆம் திகதியின் பின்னர் வாடகை மீளளிக்கப்படுவதில்லை என்ற கப்பல் நிறுவனத்தின் தீர்மானம் எடுக்கப்பட்டமை போன்ற விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | அதிகாரசபையின் மோட்டார் வாகனம் ஒன்று 2021 யூன் 23 ஆம் திகதி யப்பானில் பயன்படுத்தப்பட்ட கியர் பெட்டியைப் பயன்படுத்தி ரூபா 381,450 செலவில் திருத்தப்பட்டிருந்த போதிலும் கியர் பெட்டியிலான தவறு காரணமாக ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாதிருந்தது. இத் திருத்த வேலைகள் தொழிநுட்ப உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிராததுடன் பழைய கியர் பெட்டி களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இத் திருத்தவேலைகளை அடுத்து மோட்டார் வாகனத்திற்காக கி.மீ. 30,000 உத்தரவாதக் காலம் வழங்கப்பட்டிருந்த போதிலும், மோட்டார் வாகனம் அந் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு முறையாக திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது 2021 யூன் 21 ஆம் திகதி முதல் வாடகை அடிப்படையில் மோட்டார் வாகனம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டு இதற்காக 2023 மார்ச் 12 ஆம் திகதி வரை ரூபா 3,741,685 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 நிலை மற்றும் நாடு முழுமையாக மூடப்பட்டிருந்த காரணத்தால் தொழிநுட்ப உத்தியோகத்தரினது அல்லது மோட்டார் வாகனப் பொறியியல் பயிற்சி நிறுவகத்தின் ஆலோசனைச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு இயலாதிருந்தது.<br><br>MV X Press Perl கப்பல் அனர்த்தத்தின் கடமைகளில் ஈடுபடுவதற்காக அதிகாரசபையின் சகல ஊழியர்களும் கடமைக்கு அழைக்கப்பட்டமை, அவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்தமை காரணமாக குழாத்தில் உள்ள வாகனம் ஒன்றை தலைவருக்கு வழங்க இயலாமையால் பணிப்பாளர் சபையினதும் பெறுகைச் சபையினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு வாடகை அடிப்படையில் ஓர் வாகனத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இத் திருத்த வேலைகள் தொடர்பாக முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு வாகனத்தை உாயி நிலைக்குக் கொண்டுவருவதற்கும், வாகனத்தை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாட்டைக் கருத்திற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் விலகலின் போது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 விளைவற்றதும் குறைவான பயன்பாட்டுடனான ஆதனங்கள், இயந்திர உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையால் 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை அச்சிடப்பட்ட ரூபா 709,809 கிரயமான சிங்கள மற்றும் தமிழ் 3,110 சஞ்சிகைகளும் 15,387 சமுத்திர பத்திரிகைகளும் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நடாத்தப்படும் கண்காட்சிகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளுக்காக இச் சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் பயன்படுத்தப்படுவதற்கான இயலுமை உள்ளது. | தேவைப்பாட்டை இனங்கண்டு அச்சிடப்படுவதற்கும் பகிர்ந்தளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2011 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 672,000 பெறுமதியான ''டிங்கி'' படகும் 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 255,000 அதிகுளிரூட்டி இயந்திரமும் பாதுகாப்பற்ற முறையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது நிறுவனத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தன. | ''டிங்கி'' படகு கைதவிர்ப்புச் செய்வதற்கு பொருள் மெய்மையாய்வு சபையால் இனங்காணப்பட்டதுடன் அப் படகின் இயந்திரம் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. MV X – Press Pearl கப்பல் அனர்த்தத்தை அண்மித்த பகுதிகளில் சேகரிக்கப்படும் மிருகங்களின் பகுதிகள் மற்றும் நீர் மாதிரிகளை களஞ்சியப்படுத்துவதற்காக தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள அதிகுளிரூட்டி எதிர்காலத்தில் தென்பகுதி மாகாண ஆய்வுகூடத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | இவ் இயந்திரங்களின் தேவைப்பாடு மற்றும் பயன்பாட்டுத் தன்மை குறித்து ஆராய்ந்தறிந்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு அதுவரையில் பாதுகாப்பான முறையில் வைத்திருப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட 230 ஒட்டுமொத்த பதவியணியின் எண்ணிக்கையில் பொது முகாமையாளர் பதவியும் | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வெற்றிடமாக உள்ள பதவிகள் அனைத்தையும் நிரப்புவதற்கு வரிசை அமைச்சின் ஊடாக பிரதமர் செயலகத்திற்கும் | வெற்றிடமாக உள்ள பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கோ நிலவும் சேவைத் தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு |

| | | | |
|---|---|---|---|
| | சிரேஷ்ட நிலையில் 10 பதவியகளும் உள்ளடங்கலாக 30 பதவிகள் வெற்றிட நிலையில் காணப்பட்டன. | சனாதிபதி செயலகத்திற்கும் எழுத்து மூல கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | கட்டுப்பாட்டு முறையை வலுப்படுத்திக்கொள்வதற்கு இயலுமான வகையில் பதவிகளின் எண்ணிக்கையை திருத்திக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) பதவியில் கடமையை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரின் நிரந்தர பதவி உதவி முகாமையாளர் (நிதி) ஆன போதிலும் கணக்காளராகவும் ஆவணங்களில் கையொப்பமிட்டுள்ளார். | தெரிவிக்கப்பட்டுள்ள கருத்து சரியானதல்ல. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஆட்சேர்ப்பு முறைமையின் படி, சரியான பதவிப் பெயர் பயன்படுத்தப்பட வேண்டும். |